REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)



# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

**நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!**

**- CVPA NNT**

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 JANUARY 2026 CLICK - 10 ₹. 1



CVPA அலுவலகத்தில் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு CVPA செயலாளர் துரைபாபு அவர்கள் முன்னிலையில், CVPA தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். இந்நிகழ்வில் CVPA இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், பகுதி செயலாளர் மற்றும் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.




## CVPA செயலாளரின் அறிவிப்பு

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

இந்த புத்தாண்டில் நம்பிக்கையுடன் நமது தொழிலை தொடர்வோம். நவீன ரக புதிய கேமராக்களால் நமது தொழில் துறை முற்றிலும் மாறி வருகிறது. நாமும் இதற்கு ஏற்ப நம்மை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

2026 ஆம் ஆண்டிற்கான டைரி,காலண்டர், போன்றவை தயாராகி, இவை யாவும், சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் மூலமாக சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை கிடைக்கப் பெறாத ரெனிவலில் உள்ள உறுப்பினர்கள் சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு, பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சங்க உறுப்பினர்கள் தங்களுடைய அடையாள அட்டையை தவறாமல் தொடர்ந்து ரெனிவல் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

பொதுவாக பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை மதித்து நடப்பது சங்க உறுப்பினர்களின் மிகப்பெரிய பொறுப்பாகும். இதனால் நமது சங்கத்தின் ஒற்றுமை நிலைத்திருக்கும். சங்கத்தின் பலமும் கூடும் என்பதை அனைவரும் நன்கு அறிவோம்.

நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானத்தை மீறி செயல்பட்டு, புதிய ஒரு அமைப்பை உருவாக்கி,நமது சங்க உறுப்பினர்களிடையே வீணான குழப்பத்தை ஏற்படுத்திய காரணத்தாலும், அந்த புதிய அமைப்பிற்கு தலைமை பொறுப்பினை ஏற்று CVPA தீர்மானங்களுக்கு எதிராக செயல்பட்ட காரணத்தால், தாம்பரம் பகுதியை சேர்ந்த திரு.எம்.கோபி அவர்களையும், திரு.எஸ்.வேணு அவர்களையும் சங்கத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு இவர்கள் இருவரையும் நீக்கி இருக்கிறோம். என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அதேசமயம் இவர்கள் நடத்தும் அமைப்பிற்கும் நமது CVPA சங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, இவர்கள் இருவரிடமும் நமது சங்கம் தொடர்பாக உறுப்பினர்கள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.குறிப்பாக இந்த அமைப்பு நடத்தும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் CVPA சார்பாக கலந்து கொள்ள யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை ஏற்கனவே வாட்ஸ்அப் குழுக்களில் அறிவிப்பு வெளியிட்டு இருந்தோம். இந்த அறிவிப்பை மீறி யாரேனும் செயல்பட்டால் அவர்கள் மீதும் சங்க ரீதியாக உப விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்து வருபவர்களில் பலரது NNT கணக்கு தற்போது ஜீரோ பேலன்ஸ் நிலையில் உள்ளது. இதனால் இனி அடுத்தடுத்து ஏற்படும் NNT உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உதவ முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடும். எனவே உங்கள் NNT அக்கவுண்டில் ஜீரோ பேலன்ஸ் ஆகாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. NNT க்கு செலுத்த வேண்டிய தொகையை உடனடியாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு
P. துரைபாபு
CVPA செயலாளர்.

**CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION**
**சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்**

51/24,Bangaru Street,Ellis Road, Chennai - 600002

Regd No. : 446/96 E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in Cell : 7824034734

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O |
|---|---|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |
| 7010936732 | 9282164723 | 9840374675 | 9551144144 |

10.01.2026

**CVPA உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு**

வணக்கம்!

நமது சங்கத்தில் இதுவரை, தாம்பரம் பகுதி உறுப்பினர்களாக இருந்து வந்த திரு.M. கோபி அவர்களும்,திரு. S. வேணு அவர்களும், நமது சங்கத்தின் விதிமுறைகளுக்கு உட்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டு, தாம்பரம் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் பெடரேஷன்(தமிழ் நாடு ) என்னும் புதிய சங்க அமைப்பை தொடங்கி, திரு.M.கோபி அவர்கள் இந்த அமைப்பிற்கு செயலாளராகவும், திரு.S.வேணு அவர்கள் இந்த அமைப்பிற்கு பிஆர்ஓ ஆகவும் செயல்படுகிறார்கள்.இது நமது சங்கத்தின் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானதிற்கு எதிரானது.மேலும் இது நமது CVPA உறுப்பினர்களிடையே குழப்பம் விளைவிக்கும் கூடிய விதமாக இருக்கும் காரணத்தால், CVPA பொதுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், சங்க விதிகளை மீறி செயல்பட்ட திரு.M.கோபி அவர்களையும், திரு.வேணு அவர்களையும், 06.01.2026 முதல் சென்னை வீடியோ புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் அடிப்படை ( CVPA ) உறுப்பினர் பொறுப்பில் இருந்து, இவர்கள் இருவரையும் நீக்கி வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை CVPA உறுப்பினர்கள் அனைவருக்கும் இதை அறிவிப்பாக வெளியிடுகின்றோம்.

எனவே, இவர்கள் நடத்தும் அமைப்பிற்கும் CVPAவிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். CVPA பெயரை பயன்படுத்தி. இந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சியில் CVPA சார்பாக கலந்து கொள்ள யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இந்த அறிவிப்பையும் மீறி யாரேனும் இந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், அவர்கள் மீதும் சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O. |
|---|---|---|---|
| V.புருஷோத்தமன் | P.துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |

செயற்குழு மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள்



வடசென்னை, தண்டையார்பேட்டை பகுதியைச் சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும், அதிக மதிப்பெண் எடுக்கும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை ஒவ்வொரு ஆண்டும் ஊக்குவித்து வருபவருமான திரு.F.பிராங்கிளின் – திருமதி.அனிமேரி தம்பதியினரின் மகனும், நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினருமாகிய F.நித்தின் பிராங்க் – J.ஜெனிஷா வின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், CVPA சார்பாக நமது சங்கத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் TVPA வின் முன்னாள் பொதுச் செயலாளர் கடலூர் முத்து ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



வட சென்னை, ராயபுரம் பகுதியைச் சேர்ந்த நமது CVPA சங்க உறுப்பினர் திரு. அசோக் ராஜ் அவர்களின் மகள் யாமினிஸ்ரீ க்கு நடைபெற்ற மஞ்சள் நீராட்டு விழாவில் நமது சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



பென்டிங்க் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நமது சங்க உறுப்பினர் திரு.ரமேஷ் அவர்கள் தொடர்ந்து 50 ஆண்டு காலமாக புகைப்படக் கலைஞராக பணியாற்றி வருகிறார். இவரது 50 கால சேவையை பாராட்டும் விதமாக பென்டிங்க் பள்ளி நிர்வாகம் சார்பில் விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை பெண்கள் மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி. செல்வகுமாரி அவர்கள்,சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இவர் புகைப்படக் கலைஞர் திரு. ரமேஷ் அவர்களுக்கு, பென்டிங்க் பள்ளிக் கூடத்தில் 50 ஆண்டு காலம் புகைப்படக்காரராக இருந்து சிறந்த சேவை புரிந்தமைக்கான விருதினை வழங்கினார். திருமதி செல்வகுமாரி அவர்கள் இதே பள்ளிக்கூடத்தில் படித்த முன்னாள் மாணவி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரை இதே பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது திரு. ரமேஷ் அவர்கள் புகைப்படம் எடுத்துள்ளார் என்பது கூடுதல் தகவல்.



திரு.பிராங்கிளின் அவர்களுடைய மகனுக்கு நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அன்றைய தினம் கலந்து கொள்ள முடியாதவர்கள், மற்றும் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அடுத்த நாள் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர்.

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

CVPA 2026-ஆம் ஆண்டுக்கான டைரிக்கு விளம்பரம் கொடுத்து உதவிய அனைத்து விளம்பரதாரர்களுக்கும் CVPA சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

- CVPA நிர்வாகம்



## வருந்துகிறோம்

CVPA வடசென்னை ரெட்ஹில்ஸ் பகுதியை சேர்ந்த, கோல்டன் போட்டோகிராபி உரிமையாளரும், நமது சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவருமாகிய, திரு.N.ரவிச்சந்திரன் அவர்கள் கடந்த 04.01.26 அன்று காலை இயற்கை மரணம் அடைந்தார். அன்னாரது மறைவுக்கு, இந்நாள்,முன்னாள் நிர்வாகிகள், பகுதி செயலாளர் மற்றும் ஏராளமான சங்க உறுப்பினர்களும், இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். மேலும் நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி மறைந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை அவருடைய குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள். மேலும் இவர் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் உறுப்பினராக இருந்து வந்தார்.எனவே இவரது குடும்பத்தினரிடம் NNT நிதியில் இருந்து விரைவில் பணம் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

Regd No. : 446/96

**சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்**

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ருபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtarunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351